## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 47/2026 LW– 8 PW– 4

| | |
|---|---|
| Name | : உலகநாதன் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : பெரியகருப்பன் |
| Village | : காவல் ஆய்வாளர் |
| Taluk | : திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of March 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் பகல் 12: 15 P.M. – 12:45 P.M.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2015ம் தேதி 10.00 மணிக்கு நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த திரு. பாஸ்டின் தினகரன் என்பவர் புகார் மனு பெற்று நி.கு.எண்.611/2015 இ.த.ச.324, 395, 506(2) பிரிவுகளின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

அதே தேதியில் காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தென்னரசு மற்றும் சேவுகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தேன். ( **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகும். பார்வைமகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சாட்சிகள் மெய்யன், அழகர்சாமி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) பின்னர் சம்பவம் உண்மை என்று தெரியவரவே அதே தேதியில் 14.00 மணிக்கு நத்தம் செந்துறை ரோடு, மணக்காட்டுர் பேருந்து நிறுத்தம் அருகில் எதிரிகள் பாக்கியராஜ், தங்கையா, பழனிச்சாமி, பால்ச்சாமி, சுந்தர்ராஜ் ஆகியோரை காரணம் கூறி கைது செய்தும், பாக்கியராஜ் என்பவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பிச்சைமணி, குமரேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். பாக்கியராஜ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து திருடுபோன ரூ.10,000/-த்தில் ரூ.9,900/- தொகையை செலவு செய்தது போக மீதமிருந்த இரண்டு 50 ரூபாய் நோட்டுக்கள் வீதம் ரூ.100/-ம், கத்தி ஒன்றும் பாக்கியராஜிடமிருந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தேன். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.7 ஆகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் எதிரிகளை காவல் நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 வாயிலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (**அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. RPR.No.15/2026ல் ஒப்படைக்கப்பட்டுள்ள ரூ.50/- நோட்டுக்கள்-2 மற்றும் கைப்பிடியுடன் கூடிய கத்தி-1 அ.சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் இந்த சம்பவத்தில் எதிரிகள் செல்வம், பொன்னன், நாகராஜ் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரியவந்ததால் எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். (**அந்த எதிரி நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கின்

சட்டப்பிரிவை 324, 395, 506(2) இதச பிரிவுகளிலிருந்து இதச பிரிவு 394 ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் கண்ட சட்டப்பிரிவின் கீழ் 30.11.2015ம் தேதி குற்றயிறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4) எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இந்த வழக்கிற்கு முன்பே அறிமுகம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. எதிரிகளை கைது செய்யும்போது எதிரிகள் யாராவது மதுஅருந்தியிருந்தார்களா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றாலும், அதிலுள்ள விபரங்கள் 1ம் எதிரிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் மது அருந்துவதற்கும், பிரியாணி சாப்பிடுவதற்கும் ரூ.9900/–ஐ செலவு செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு நிலையில் எதிரிகள் யாரும் மது அருந்தியதாக தெரியவரவில்லை என்பதால் அது பொய்யானது என்றால் சரியல்ல. எப்போது மது அருந்தினார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் எந்த மதுக்கடையில் மதுஅருந்தினார்கள் எந்த கடையில் பிரியாணி சாப்பிட்டார்கள் என்று குறிப்பிடவில்லை என்றாலும், அதை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரிதான். எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் நீதிமன்றத்தில் விசாரணைக்குவரும்பரை அறிமுகம் இல்லை என்றால் அது குறித்து தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்களை எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரரிடமிருந்து சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.23 13:22:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்